Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

RESEARCH ARTICLE

# தமிழ் இலக்கிய மரபில் 'எழுபிறப்பு' சிந்தனை: அறம், வினைப்பயன், மறுபிறப்பு மற்றும் எண் குறியீட்டியல் சார்ந்த ஆய்வு

*The Concept of "Ezhupirappu" (Seven Births) in Tamil Literary Tradition: A Study of Aram, Vinaippayan, Rebirth and Number Symbolism*

**Dr.KAVITHA N.M.[1,*], Dr. MOGANAMBIKA K. P.[2], Dr VALARMATHI V. P.[3]**

[1] *Assistant professor, Tamil Department, Vellalar College For Women(Autonomous), Thindal, Erode., India*
[2] *Assistant professor, Department of Tamil Vellalar college for women (Autonomous ), Thindal. Erode., India*
[3] *Assistant Professor, Department of Tamil Vellalar college for women (Autonomous ), Thindal. Erode., India*

***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** Dr.KAVITHA N.M. — smpkavitha@gmail.com
**ORCID:** Dr.KAVITHA N.M. https://orcid.org/0009-0005-9683-3860; Dr. MOGANAMBIKA K. P. https://orcid.org/0009-0001-7917-1798


| Received / பெறப்பட்டது | Revised / திருத்தப்பட்டது | Accepted / ஏற்கப்பட்டது | Published / வெளியிடப்பட்டது |
|---|---|---|---|
| 20 September 2026 | 25 September 2026 | 28 September 2026 | 01 October 2026 |
| **Article ID / கட்டுரை எண்** TAJP-2026-00050 | **DOI** 10.63300/tm1205102026.01 | **Vol. / No.** **Vol. 12, No. 05** | **Pages** 11-38 |


**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ் இலக்கியத்தில் ‘எழுபிறப்பு’ (எழுமை) என்னும் சொல்லாட்சி அறம், வினைப்பயன், மறுபிறப்பு நம்பிக்கை ஆகிய கருத்துகளோடும், ‘ஏழு’ என்னும் எண்ணுக்குரிய பண்பாட்டுக் குறியீட்டு மதிப்போடும் நெருங்கிய தொடர்புடையதாக விளங்குகிறது. இச்சொல்லாட்சி வெளிப்படையாகபல திருக்குறள்களில் இடம்பெறுகிறது. அக்குறள்களை மையமாகக் கொண்டு சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், மணிமேகலை, பக்தி இலக்கியம் ஆகியவற்றில் இடம்பெறும் தொடர்புடைய பதிவுகளுடன் ஒப்பிட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது. பனுவல் பகுப்பாய்வு, ஒப்பீட்டு வாசிப்பு, குறியீட்டியல் ஆகிய அணுகுமுறைகளின் வழி ‘எழுமை’ என்னும் சொல்லாட்சியின் பொருண்மை மற்றும் பண்பாட்டுப் பின்னணி ஆராயப்படுகிறது. ‘ஒருமை–எழுமை’ என்னும் இணைமுரண் வழியாக வள்ளுவர் அறத்தின் பயனை ஒரு பிறவிக்குள் மட்டுப்படுத்தாமல், தொடர்ச்சியான பிறவிகளுக்கும் தலைமுறைகளுக்கும் விரிவுபடுத்துகிறார். அதேவேளை, ஊழையும் முயற்சியையும் இணைத்துப் பேசுவதன் மூலம் அறத்தை வெறும் பயன்நோக்குச் செயலாகச் சுருக்காமல் நிலைநிறுத்துகிறார் என்பதும் புலப்படுகிறது. மேலும், ‘எழுமை’ என்பது எண்ணியல் அடிப்படையில் ஏழு பிறவிகளை மட்டும் குறிப்பதன்று. முழுமை, தொடர்ச்சி, பெருக்கம் ஆகிய பண்பாட்டுப் பொருண்மைகளை உணர்த்தும் எண்–மரபுச் சொல்லாட்சியாகவும் இயங்குகிறது என்ற கருதுகோள் இவ்வாய்வின் வழி முன்வைக்கப்படுகிறது.

**Abstract**

In Tamil literature, the expression 'Ezhu Pirappu' (Ezhumai) is closely associated with the concepts of virtue, the consequences of actions, and the belief in rebirth, as well as with the cultural symbolic significance attributed to the number 'seven.' This expression occurs explicitly in several couplets of the Tirukkural. Taking these couplets as the primary textual sources, the present study undertakes a comparative examination of related references found in Sangam literature, Silappathikaram, Manimekalai, and Bhakti literature. Through the approaches of textual analysis, comparative reading, and semiotics, the study explores the semantic dimensions and cultural context of the expression 'Ezhumai.' Through the binary opposition of 'Orumai–Ezhumai' (one birth–multiple births), Valluvar extends the fruits of virtue beyond a single birth to successive births and generations. At the same time, by relating fate (ūzh) and human effort (muyarchi), he sustains virtue without reducing it merely to an action performed for the sake of its rewards. Furthermore, the study proposes the hypothesis that 'Ezhumai' does not denote merely seven births in a numerical sense; rather, it functions as a cultural numerical tradition that conveys the notions of completeness, continuity, and proliferation.

## 1. முன்னுரை

பிறப்பு-இறப்புச் சுழற்சியை உயிரின் தொடர்ச்சியாகக் காணும் சிந்தனை தமிழ் இலக்கியத்தின் பல அடுக்குகளிலும் ஆழப் பதிந்துள்ளது. 'இம்மை', 'மறுமை', 'பிறவி', 'வினை', 'ஊழ்' முதலிய சொற்கள் சங்க இலக்கியம் தொடங்கிக் காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள் வரை தொடர்ந்து வழங்கி வருகின்றன. இவற்றுள் 'எழுபிறப்பு' என்பது பிறவிக் கருத்தை 'ஏழு' என்னும் எண்ணோடு இணைக்கும் தனித்தன்மை வாய்ந்த சொல்லாட்சியாகும். 'எழுபிறப்பும் தீயவை தீண்டா", எழுமை எழுபிறப்பும் உள்ளுவர்' போன்ற தொடர்கள் மக்கட்பேறு, நன்றியறிதல் ஆகிய வாழ்வியல் அறங்களின் பயனைப் பிறப்பெல்லைகளைக் கடந்து நீட்டிக் காட்டுகின்றன. இச்சொல்லாட்சியை ஒரே கோணத்தில் விளக்கிவிட இயலாது. அறவியல் நோக்கில் இது நன்மை தீமைகளின் விளைவுகள் நீடிப்பதைக் குறிக்கிறது. வினைப்பயன் நோக்கில் செயலுக்கும் பயனுக்கும் இடையிலான கால இடைவெளியை விரிக்கிறது. மறுபிறப்பு நம்பிக்கையின் நோக்கில் உயிரின் தொடர்ச்சிக்குச் சான்றாகிறது. குறியீட்டியல் நோக்கில் 'ஏழு' என்னும் எண்ணின் முழுமைப் பொருளோடு இயைகிறது. இந்நான்கு தளங்களையும் ஒருசேர இணைத்து வாசிப்பதே இக்கட்டுரையின் நோக்கம். அத்துடன், 'எழுமை' என்பது ஏழு பிறவிகளை எண்ணிக்கையால் வரையறுக்கும் கோட்பாட்டுச் சொல் அன்று; முழுமையையும் தொடர்ச்சியையும் உணர்த்தும் பண்பாட்டு எண்-மரபுத்தொடரே என்னும் கருதுகோளை முன்வைத்து, பனுவற் சான்றுகளின் துணையுடன் இக்கட்டுரை அதைச் சோதிக்கிறது. இவ்வாய்வுக்குத் தமிழ் இலக்கிய வரலாற்றுப் பின்புலத்தைச் சுவெலபில், ஹார்ட்

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

ஆகியோரின் பொது ஆய்வுகளும், பிறப்புக் கோட்பாடுகளின் அறவியல் பரிமாணத்தை ஒபேசேகரவின் ஒப்பீட்டு ஆய்வும் வழங்குகின்றன.




Fig 1: தமிழ் இலக்கியத்தில் எழுபிறப்பு - ஓர் ஆய்வு

இப்படம் தமிழ் இலக்கியத்தில் 'எழுபிறப்பு' என்ற கருத்தாக்கத்தை நான்கு முக்கியக் கோணங்களில் விளக்குகிறது. அறவியல் ரீதியாக நன்மைகளின் நீடிப்பையும், வினையின் கால இடைவெளியையும், மறுபிறப்பு நம்பிக்கையில் உயிரின் தொடர்ச்சியையும், குறியீட்டியல் நோக்கில் 'ஏழு' என்ற எண்ணின் முழுமையையும் இது அழகிய ஓவியங்கள் மற்றும் திருக்குறள் சான்றுகளுடன் சித்தரிக்கிறது.

## 2. ஆய்வு அணுகுமுறை

பனுவல் பகுப்பாய்வு, ஒப்பீட்டு வாசிப்பு, பண்பாட்டுக் குறியீட்டியல் ஆகிய மூன்று அணுகுமுறைகளை இவ்வாய்வில் கையாளப்படுகிறது. தமிழ் இலக்கிய மரபில் ‘எழுபிறப்பு’ என்னும் சிந்தனை அறம், வினைப்பயன், மறுபிறப்பு மற்றும் ‘ஏழு’ என்னும் எண்ணின் குறியீட்டியல் ஆகியவற்றுடன் எவ்வாறு தொடர்புபடுத்தப்படுகிறது என்பதை ஆராய்கிறது

## 3. மீளாய்வு

‘எழுபிறப்பு’ தொடர்பான தமிழ் ஆய்வுகளைக் கருப்பொருள் அடிப்படையில் ஆறு தொகுதிகளாகப் பகுக்கலாம். குறளில் பிறப்பு-மறுபிறப்புக் கருத்துகள்; குறளில் அறம், வினை, ஊழ் தொடர்பான சிந்தனைகள்; சங்க இலக்கியத்தில் இம்மை--மறுமைக்

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

கருத்துகள்; சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்களில் பிறவி, வினை பற்றிய கருத்துகள்; தமிழ் இலக்கியத்தில் எண்களின் குறியீட்டுப் பயன்பாடு; தமிழ் அறவியல் ஆய்வுகளின் கோட்பாட்டு, முறையியல் அடிப்படைகள். இத்துறையில், வள்ளுவரைப் பற்றிய வரலாற்றுக் கதையாடல்களும் அவரைத் தத்தமதாக உரிமை கொண்டாடும் சமயச் சார்புகளும் குறளின் வாசிப்பை எவ்வாறு பாதித்துள்ளன என்பதைப் பிளாக்பர்ன் (Blackburn) அறிஞர் விவாதிக்கிறார். இந்தியக் கருமக் கோட்பாடுகளின் பன்முகத்தன்மையை ஓஃப்ளாஹெர்ட்டி (O'Flaherty) என்பவர் தொகுத்துள்ளார். இவ்வாய்வுகளின் பின்னணியில், இக்கட்டுரை மேற்கூறிய தளங்களை 'எழுபிறப்பு' என்னும் ஒற்றைச் சொல்லாட்சியின் வழியாக இணைத்து வாசிக்கிறது.




**Fig 2: எழுபிறப்பு: ஆய்வு வினாக்கள், முறையியல் மற்றும் இலக்கிய மீளாய்வு**

இப்படம் 'எழுபிறப்பு' குறித்த ஆய்வின் நான்கு முக்கிய வினாக்களையும், பனுவல் பகுப்பாய்வு போன்ற மூன்று ஆய்வு முறைகளையும் தெளிவாகக் காட்டுகிறது. மேலும், திருக்குறள், காப்பியங்கள், சங்க இலக்கியம் ஆகியவற்றின் சான்றுகளுடனும், முந்தைய 6 கருப்பொருள் மீளாய்வுகளுடனும் 'எழுபிறப்பு' எவ்வாறு ஒப்பீட்டு ரீதியாக ஆராயப்படுகிறது என்பதை இது சுருக்கமாக விளக்குகிறது.

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

## 4. 'எழுமை', 'எழுபிறப்பு': சொல்லியலும் பொருண்மையியலும்

### 4.1 சொல்லமைப்பு

'ஒருமை', 'இருமை', 'எழுமை' ஆகிய மூன்றும் எண்ணை அடியாகக் கொண்டு 'மை' விகுதி ஏற்றுப் பிறந்த பண்புப்பெயர்கள். 'ஏழு' என்னும் எண் பெயர்ச்சொற்களுக்கு முன் 'எழு' எனத் திரிந்து வருவதை எழுகடல், எழுநிலை, எழுபிறப்பு ஆகிய வழக்குகளில் காணலாம். குறளில் 'ஒருமை' இப்பிறவியையும் 'எழுமை' தொடர்ந்து வரும் பிறவிகளையும் சுட்டி இணைமுரணாக அமைகிறது: 'ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ... எழுமையும் ஏமாப் புடைத்து' (398); 'ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின் எழுமையும் ஏமாப் புடைத்து' (126); 'ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும் தான்புக் கழுந்தும் அளறு' (835). மூன்று குறள்களிலும் இவ்விணைமுரண் ஏறத்தாழ ஒரே கட்டமைப்பில் அமைந்திருப்பது கவனத்துக்குரியது. 'இருமை' (குறள் 23) என்பதற்கு இம்மை--மறுமை, பிறப்பு--வீடு, நன்மை--தீமை எனப் பல பொருள்களை உரை மரபுகள் கூறுகின்றன. எனவே இந்த எண்ணடிச் சொற்களைக் காலத்தையும் நிலையையும் வகைப்படுத்தும் ஒரு சொல்வரிசையாகக் கருதலாம்.

### 4.2. பொருள் வாசிப்புகள்

'எழுமை/எழுபிறப்பு' என்பதற்கு உரை மரபில் மூவகைப் பொருள்கள் வழங்குகின்றன. 1.நேர்ப்பொருள்; அஃதாவது தொடர்ச்சியான ஏழு பிறவிகள். 2. 'ஏழு' என்பதைப் 'பல', 'எல்லா' என்னும் பொருளில் கொள்ளும் மரபுத்தொடர் வாசிப்பு. 3. உயிர்கள் பிறக்கும் ஏழு வகைகளைக் குறிக்கும் 'எழுவகைப் பிறப்பு' என்னும் வாசிப்பு; இத்தகைய பட்டியல்கள் நூல்தோறும் மாறுபடுவதுண்டு. நவீன உரைகளிலும் இவ்வேறுபாடு தெரிகிறது:

**ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**

**எழுமையும் ஏமாப் புடைத்து (குறள் 398)**

இக்குறளுக்கு மு. வரதராசனாரும் சாலமன் பாப்பையாவும் 'ஏழு பிறப்பிலும்' என்று பொருள் கொள்ள, மு. கருணாநிதி 'ஏழேழு தலைமுறைக்கும்' என்று உரை எழுதுகிறார். கல்வி 'வினைகள்போல உயிரின்கண் கிடந்து அது புக்குழிப் புகும்' என்று பழைய உரை விளக்குகிறது. இது கல்வியை வினையைப் போல உயிரோடு தொடர்ந்து செல்லும் தொகுதியாகக் காணும் பார்வையாகும்.

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

**எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்**

**விழுமந் துடைத்தவர் நட்பு (குறள் 107)**

இக்குறளில் 'எழுமை எழுபிறப்பும்' என ஒரே கருத்து இரட்டித்து வருவது எண்ணிக்கைத் துல்லியத்தை அன்றி அழுத்தத்தையே உணர்த்துகிறது.

**ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்**

**எழுமையும் ஏமாப் புடைத்து (புறள்.126)**

'எழுமையும் ஏமாப்புடைத்து' என்பது காப்பு எல்லாப் பிறவிகளிலும் தொடரும் என்னும் பொதுப்பொருளில் அமைகிறது.




**Fig 3: 'எழுமை', 'எழுபிறப்பு': சொல்லியலும் பொருண்மையியலும்**

இப்படம் 'எழுமை' என்ற சொல்லின் இலக்கண அமைப்பையும் அதன் மூன்று முக்கியப் பொருள் வாசிப்புகளையும் விளக்குகிறது. 'ஒருமை-எழுமை' என்ற இணைமுரண் குறள்களின் வழியே தொடர் பிறவிகளைக் குறிப்பதையும், 'எழுபிறப்பு' என்பது வெறும் எண்ணிக்கையல்லாது 'எல்லா/பல பிறவிகளையும்' உணர்த்தும் மரபுத்தொடர் வாசிப்பே பொருத்தமானது என்பதையும் இது தெளிவாகச் சித்தரிக்கிறது.

**5. திருக்குறளில் எழுபிறப்பும் அறமும்**

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

## 5.1 மையச் சான்றுகள்: தொகுப்பும் மூலப்பாடல் விளக்கமும்

அட்டவணை 1 குறளின் ஐந்து மையச் சான்றுகளைத் தொகுத்துக் காட்டுகிறது. இவற்றுள் மூன்று அறத்துப்பாலிலும் இரண்டு பொருட்பாலிலும் இடம்பெறுகின்றன; நான்கு நன்மையின் பயனையும் ஒன்று தீமையின் பயனையும் கூறுகின்றன. உரையாசிரியர்களிடையே சொற்பொருளில் சிறுசிறு வேறுபாடு உண்டு; இங்குப் பெரும்பான்மை உரைகள் ஒத்துக்கொள்ளும் பொதுப்பொருளே கொள்ளப்படுகிறது.

| குறள் | அதிகாரம் / பால் | சொல்லாட்சி | பயன் (நன்மை/தீமை) |
|---|---|---|---|
| 62 | மக்கட்பேறு (அறத்துப்பால்) | எழுபிறப்பும் தீயவை தீண்டா — பழிபடாப் பண்புடை மக்கள் | தீவினைப் பயன் அணுகாமை (நன்மை) |
| 107 | செய்ந்நன்றி அறிதல் (அறத்துப்பால்) | எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் — துன்பம் துடைத்தவர் நட்பு | நன்றி நினைவின் தொடர்ச்சி (நன்மை) |
| 126 | அடக்கமுடைமை (அறத்துப்பால்) | ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் — எழுமையும் ஏமாப்பு | பாதுகாப்பு (நன்மை) |
| 398 | கல்வி (பொருட்பால்) | ஒருமைக்கண் தான்கற்ற கல்வி — எழுமையும் ஏமாப்பு | பாதுகாப்பு (நன்மை) |
| 835 | பேதைமை (பொருட்பால்) | ஒருமைச் செயலாற்றும் பேதை — எழுமையும் அளறு | அழுந்துதல் / நரகம் (தீமை) |

**மக்கட்பேறு**

**எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்**

**பண்புடை மக்கட் பெறின் (குறள் 62)**

**பொருள்:** பழிச்சொல் விளங்காத, பண்புடைய பிள்ளைகளைப் பெற்றால், தீமைகள் அவரை எழு பிறப்பிலும் அணுகா.

**விளக்கம்:** இங்கு நன்மைக்கு மூலம் பெற்றோரின் சொந்தச் செயலன்று; பிள்ளைகளின் பண்பு. ஆகவே இது தனிமனிதக் கருமக் கணக்காக மட்டுமன்றிக் குடிவழி அறமாகவும் வாசிக்கப்படுகிறது; 398க்கு முன்வைக்கப்படும் 'தலைமுறை' வாசிப்பின் பின்புலமும் இதுவாக இருக்கக்கூடும். 'தீண்டா' என்னும் சொல் நல்வினைப்பயனைத் தீமையை

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

அணுகவிடாத பாதுகாப்பு வளையம்போலச் சித்திரிக்கிறது (Thirukkural.net, n.d.-a; புலியூர்க் கேசிகன் உரை).

**செய்ந்நன்றி அறிதல்**

**எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தம்கண்**

**விழுமந் துடைத்தவர் நட்பு (குறள்.107)**

**பொருள்:** தம் துன்பத்தைத் துடைத்தவரின் நட்பை நன்றியறிந்த சான்றோர் எழு பிறப்பிலும் நினைப்பர்.

**விளக்கம்:** 'எழுமை', 'எழுபிறப்பு' என்னும் இரு சொற்களும் அடுத்தடுத்து வருவது எண்ணிக்கைத் துல்லியத்தை அன்றி நினைவின் தொடர்ச்சியை அழுத்திக் கூறும் நடையாகக் கொள்ளத்தக்கது. இங்குப் பிறவித் தொடர்ச்சி தண்டனை-பரிசுக் கணக்காக அன்றி, நன்றியுணர்வால் பிணைக்கப்பட்ட உறவின் நீட்சியாகவே அமைகிறது.

**அடக்கமுடைமையும் கல்வியும்**

**ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்**

**எழுமையும் ஏமாப் புடைத்து (குறள். 126)**

**பொருள்:** ஆமை உறுப்புகளை ஓட்டுக்குள் அடக்குவதுபோல, ஒரு பிறவியில் ஐம்பொறிகளையும் அடக்க வல்லவனுக்கு அவ்வடக்கம் எழு பிறவிக்கும் காப்பாகும் (126); ஒருவன் ஒரு பிறவியில் கற்ற கல்வி அவனுக்கு எழு பிறவிக்கும் காப்பாகும் (398).

**விளக்கம்:** இரு குறள்களின் இரண்டாமடியும் சொல்லுக்குச் சொல் ஒன்றுபடுகிறது; ஒரே கருத்துச் சூத்திரம் இரண்டிலும் பயன்படுகிறது. 'ஒருமையுள்' என்பது ஒரு பிறவிக்குள் எனப் பொருள்படுவதால் முதலடியின் 'ஒருமை' இரண்டாமடியின் 'எழுமை'யோடு இணைமுரணாக நிற்கிறது. ஆமையின் அடக்கம் பயிற்சியால் வருவதுபோலவே கல்வியும் முயற்சியால் ஈட்டப்படுவதால், இரண்டும் 'ஒருமை'யில் செய்யப்படும் முயற்சியும் 'எழுமை'யில் விளையும் காப்பும் என்ற அமைப்பில் பொருந்துகின்றன. இங்கு அறம் கடமையாக மட்டுமன்றி வரும் பிறவிகளுக்குச் சேமிக்கப்படும் காப்பாகவும் அமைகிறது; 'எழுமை'யைப் பிறவிகளாக அன்றித் தலைமுறைகளாக வாசிக்கும் மரபும் உண்டு — கல்வி தலைமுறைக்குத் தலைமுறை கடத்தப்படுவதே அவ்வாசிப்புக்கு அடிப்படையாக இருக்கலாம்.

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

**பேதைமை**

**ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்**

**தான்புக் கழுந்தும் அளறு. (குறள் 835)**

**பொருள்:** பேதை ஒரு பிறவியில் செய்யும் தீச்செயல், எழு பிறவியிலும் அவன் தானே புகுந்து அழுந்தும் நரகமாக அமைகிறது.

**விளக்கம்:** 'தான்புக்கு' என்னும் தொடர், நரகம் வெளியிலிருந்து திணிக்கப்படுவதன்று; தன் செயலாலேயே தான் புகுவது என்னும் பொறுப்புணர்வை உணர்த்துகிறது. 126, 398இல் 'ஏமாப்பு' எனவரும் பயன், இங்கு எதிர்நிலையில் 'அளறு' ஆகிறது; ஒரே அடியமைப்பு நன்மைக்கும் தீமைக்கும் பொதுவாக ஆளப்படுகிறது.

ஐந்து குறள்களையும் அடிவரிசையில் ஒப்பிட்டால், 126, 398, 835 ஆகிய மூன்றிலும் முதலடி 'ஒருமை'யோடு (செயல்) தொடங்கி இரண்டாமடி 'எழுமை'யில் (பயன்) முடிவது தெளிவாகிறது; 62, 107 ஆகியவற்றில் 'எழுபிறப்பு' முதலடியிலேயே வருகிறது. இவ்வாறு 'ஒருமை-எழுமை' இணைமுரண் மூன்று குறள்களில் அடியமைப்பாகவே வெளிப்படுவது, பயன்நீட்சி என்னும் கருத்தைத் தற்செயலான சொல்லாட்சியாக அன்றித் திட்டமிட்ட நடையமைப்பாகக் கருத இடமளிக்கிறது. இம்மூன்றில் இரண்டு நன்மையையும் ஒன்று தீமையையும் சுட்டுகின்றன.

## 5.2 அறம்: பயன்நோக்கும் அகத்தூய்மையும்

திருக்குறள் அறத்தைப் பிறவிப் பயனுக்கான முதலீடாக மட்டுமே சுருக்கிவிடவில்லை.

**“சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு**

**ஆக்கம் எவனோ உயிர்க்கு” (குறள் 31)**

என அறம் உயிர்க்கு அளிக்கும் சிறப்பையும் செல்வத்தையும் எடுத்துரைக்கின்றார் திருவள்ளுவர். மேலும்

**“மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்” (குறள் 34)**

என அறத்தின் அடிப்படையை அகத்தூய்மையில் நிலைநிறுத்துகிறார். மேலும்,

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

**“வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்**

**வாழ்நாள் வழியடைக்கும் கல்” (குறள் 38)**

என்ற குறளில் இடம்பெறும் “கல்” என்பதற்குப் பிறவித் தொடர்ச்சியைத் தடுக்கும் கல் எனச் சில உரையாசிரியர்கள் விளக்கம் அளிக்கின்றனர்.

இதனால், எழுபிறப்பைக் குறிக்கும் குறள்களைத் தனித்த நிலையில் நோக்காமல், அறத்தின் பயனை எடுத்துரைக்கும் குறள்களுடனும், அறத்தின் உள்நிலையான தூய்மையையும் ஒழுக்கத்தையும் வலியுறுத்தும் குறள்களுடனும் இணைத்துப் புரிந்துகொள்ள வேண்டும். இவ்வகையில், எழுபிறப்புக் குறள்கள் அறத்தைச் செயல்படுத்துவதற்கான பயன்நோக்க ஊக்கத்தை வழங்குகின்றன; அதேசமயம், பிற குறள்கள் அறத்தின் உண்மையான அடித்தளமாக அகத்தூய்மை, ஒழுக்கம், கடமை உணர்வு ஆகியவற்றை முன்னிறுத்துகின்றன. எனவே, திருக்குறளில் அறம் என்பது மறுமைப் பயனை நோக்கிய செயலாக மட்டுமல்லாமல், தூய்மையான உள்ளத்துடன் மேற்கொள்ளப்படும் ஒழுக்கநெறிசார் வாழ்வாகவும் அமைகிறது. இவ்விரு பரிமாணங்களும் ஒன்றுக்கொன்று முரணானவை அல்ல; மாறாக, அறத்தின் பயனையும் அதன் அடிப்படைத் தன்மையையும் ஒருங்கிணைத்துக் காட்டும் இருநிலை அமைப்பாகத் திருக்குறளில் வெளிப்படுகின்றன.ஆய்வுநோக்கில் முக்கியமான திருத்தம்: “பிறவி வழியை அடைக்கும் கல்” என்பது திருவள்ளுவரின் நேரடி உரை அல்ல; அது சில உரையாசிரியர்கள் வழங்கும் விளக்கமாகும்.



Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

**Fig 4: திருக்குறளில் எழுபிறப்பும் அறமும்**

இப்படம் திருக்குறளில் 'எழுபிறப்பு' மற்றும் 'அறம்' குறித்துக் கூறப்பட்டுள்ள ஐந்து முக்கியக் குறள்களின் (62, 107, 126, 398, 835) கருத்தை அட்டவணை மற்றும் அழகான ஓவியங்கள் மூலம் விளக்குகிறது. நன்மைகளின் தொடர்ச்சி, நரகத் துன்பம் மற்றும் 'மனத்துக்கண் மாசிலன் ஆதல்' என்ற அகத்தூய்மையே அறத்தின் அடிப்படை என்பதை இது தெளிவாக எடுத்துரைக்கிறது.

**6. வினைப்பயனும் ஊழும்**

## 6.1 குறளில் ஊழும் முயற்சியும்

குறளின் 'ஊழ்' அதிகாரம் செயலின் பயன் வந்தடையும் தவிர்க்க இயலாத ஒழுங்கை உணர்த்துகிறது.

**“வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி**

**தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது” (குறள் 377),**

**“ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று**

**சூழினுந் தான்முந் துறும்” (குறள் 380).**

ஆனால் அதே நூல்

**“தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சிதன்**

**மெய்வருத்தக் கூலி தரும்” (குறள் 619),**

**“ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்**

**தாழாது உஞற்று பவர்“ (குறள் 620)**

என முயற்சியின் ஆற்றலையும் நிறுவுகிறது. இவ்வாறு குறளின் வினைக் கோட்பாடு தீர்மானவாதத்துக்கும் முயற்சிக்கும் இடையிலான சமநிலையில் நிற்கிறது; 'விதி வலியது' என்ற குருட்டு நம்பிக்கையை அன்றி முயற்சியை வலியுறுத்திய சமூகமாகவே தமிழ்ச் சமூகம் காட்சியளிக்கிறது என்று தமிழ் இணையக் கல்விக்கழகப் பாடமும் சுட்டுகிறது. இச்சமநிலையே எழுபிறப்புக் குறள்களை வெறும் விதிக்கணக்காக்கிவிடாமல், செயலை 'ஒருமை'க்குரியதாகவும் பயனை 'எழுமை'க்கு நீள்வதாகவும் காட்டுகிறது.

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

## 6.2 சிலப்பதிகாரத்தில் ஊழ்வினை

சிலப்பதிகாரம் தன் அடிப்படைக் கருத்துகளாக மூன்று உண்மைகளை முன்வைக்கிறது: அரசியல் பிழைத்தோர்க்கு அறமே கூற்றாகும்; பத்தினியைச் சான்றோர் போற்றுவர்; ஊழ்வினை வந்து பயனூட்டும் (இளங்கோவடிகள்). கோவலனின் கொலைக்கு ஊழ்வினையே காரணம் எனக் காப்பியம் பல இடங்களில் சுட்டுகிறது.

**அரைசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற்று ஆவதூஉம்**
**உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்**
**ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்**
**சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்**
**சிலப்பதி காரம் என்னும் பெயரால்**
**நாட்டுதும் யாம்ஓர் பாட்டுடைச் செய்யுள்**

**(சிலப்பதிகாரம். பதிகம்)**

**பொருள்:** அரசியல் நெறி தவறியவர்க்கு அறமே எமனாகும் என்பதையும்; புகழ்மிக்க பத்தினியைச் சான்றோர் போற்றுவர் என்பதையும்; ஊழ்வினை முதிர்ந்து வந்து தன் பயனை ஊட்டும் என்பதையும், வினையின் சூழ்ச்சியால் விளைந்த சிலம்பு காரணமாக 'சிலப்பதிகாரம்' எனும் பெயரில் பாட்டுடைச் செய்யுளாக நிறுவுவோம் என்பது கருத்து.

**விளக்கம்:** 'உருத்து' என்பதற்கு உரைகள் வினை முதிர்ந்து எழுதல் எனப் பொருள் கொள்ளும்; 'ஊட்டும்' என்பது உண்பிக்கும் எனும் பொருளது — ஊழ்வினை தான் விளைத்த பயனைச் செய்தவனுக்கே ஊட்டுவதாகச் சித்திரிக்கப்படுகிறது. குறளும் 'வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது' (377) என நுகர்ச்சியை ஊழோடு பிணைக்கிறது; இவ்வகையில் இரு நூல்களும் பயனை 'நுகரப்படுவது' என்றே உருவகிக்கின்றன. பதிகம் இளங்கோவடிகளாலேயே இயற்றப்பட்டதா, பிற்காலப் புலவரால் சேர்க்கப்பட்டதா என்பதில் ஆய்வாளரிடையே கருத்து வேறுபாடு உண்டு; மேலும் 'எழுமை', 'எழுபிறப்பு' என்னும் சொற்கள் இவ்வடிகளில் இடம்பெறவில்லை என்பதால் இங்கு ஒப்பீடு கருத்தளவிலானதே.

**மதுராபதியின் உரை**

**தோழீநீ ஈதொன்று கேட்டியென் கோமகற்கு**
**ஊழ்வினை வந்தக் கடை**

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

**மாதராய் ஈதொன்று கேளுன் கணவற்குத்**

**தீதுற வந்த வினை (சிலம்பு கட்டுரை காதை, அடிகள் 27--30)**

**பொருள்:** தோழியே, என் அரசனுக்கு ஊழ்வினை வந்து சேர்ந்த வேளை இது; பெண்ணே, உன் கணவனுக்குத் தீமை நேரும்படி வந்த வினையும் உண்டு என்பது கருத்து.

**விளக்கம்:** மதுராபதித் தெய்வம் இருவேறு துன்பங்களை ஒரே காரணக் கோட்பாட்டால் விளக்குகிறது. 'வந்தக்கடை' என்னும் காலக்குறிப்பு ஊழை ஒரு குறிப்பிட்ட கணத்தில் வந்தடையும் நிகழ்வாகக் காட்டுகிறது; இது குறள் 380இன் 'சூழினுந் தான்முந் துறும்' என்னும் உருவகத்தோடு ஒப்பிடத்தக்கது. இதன் பின் தெய்வம் கோவலனின் முற்பிறவிச் செய்தியை எடுத்துரைக்கிறது: சிங்கபுரத்து அரசுப்பணியிலிருந்த பரதன் (கோவலனின் முற்பிறவி) சங்கமன் என்பவனை 'ஒற்றன் இவனெனப் பற்றினன் கொண்டு' தண்டனைக்கு ஆளாக்க, சங்கமன் கொலையுண்டான்; அவன் மனைவி இத்துயருக்குக் காரணமானவரும் இதே துயரை அடைவாராக எனச் சபித்தாள்; அச்சாபமே இப்பிறவியில் கோவலனின் கொலையாக விளைந்தது (இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், கட்டுரை காதை). ஒரு பிறவியில் செய்த செயல் மறுபிறவியில் அதைச் செய்தவனையே தேடிவந்து பயனூட்டுவதற்குக் காப்பியத்தில் இது தெளிவான நிகழ்வுச் சான்றாகிறது.

இதைக் குறளோடு ஒப்பிட்டால் இரு வேறுபாடுகள் புலப்படுகின்றன. குறளில் 'ஒருமை--எழுமை' பொதுநிலையான அறவியல் கூற்று; சிலம்பில் அது 'பரதன்--கோவலன்' எனும் இரு பிறவிகளாகவும், சங்கமனும் சாபமும் என்னும் இடைநிகழ்வுகளோடும் கதையாக்கப்படுகிறது. மேலும், குறள் 835இல் 'தான்புக்கு' பேதை தன் செயலாலேயே நரகத்தில் புகுவதைக் குறிப்பதுபோல இங்கும் விளைவு செயலைச் செய்தவனிடமே திரும்புகிறது; ஆனால் சிலம்பில் சாபமும் இடம்பெறுவதால், வினைப்பயன் தானியங்கும் காரணத்தொடராக மட்டுமன்றித் துயருற்றவரின் சொல்லாலும் இயக்கப்படுவதாகக் காட்டப்படுகிறது எனலாம். பாண்டியனின் வீழ்ச்சிக்குப் பதிகம் 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று' என அரச அறப்பொறுப்பையும், கட்டுரை காதை 'ஊழ்வினை' என்னும் முன்வினையையும் காரணமாக்குகின்றன; மனிதப் பொறுப்பும் ஊழும் இணைந்து இயங்குவதாகவே காப்பியம் காட்டுகிறது எனக் கொள்ளலாம். இது பிரிவு 6.1இல் கண்ட குறளின் ஊழ்—முயற்சி சமநிலைக்குக் கருத்தளவில் ஒப்பானது.

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)




**Fig 5: வினைப்பயனும் ஊழும்**

இப்படம் ஊழ் மற்றும் முயற்சி குறித்துத் திருக்குறளுக்கும் சிலப்பதிகாரத்திற்கும் இடையிலான ஒப்பீட்டை விளக்குகிறது. குறள் ஊழையும் முயற்சியையும் சமநிலையில் நிறுத்தி 'முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்' என்கிறது. ஆனால் சிலம்போ, கோவலனின் முற்பிறவிப் பரதன் கதையின் வழியே 'ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்' என்பதை மையப்படுத்துகிறது.

### 6.3 மணிமேகலையில் ஊழ்

உதயகுமரன் மணிமேகலை மீது கொண்ட காதலாலும், முற்பிறப்புத் தொடர்பாலும் மற்றும் ஊழ்வினைத் தாக்கத்தினாலும் காப்பியத்தில் பல நிகழ்வுகள் ஏற்படுகின்றன. மாதவியும் மணிமேகலையும் உலகியல் இன்பங்களைத் துறந்து அறநெறியைப் பின்பற்றுவதற்கு ஊழ்வினையின் பயனை உணர்ந்ததே காரணமாகிறது. மணிமேகலைக் காப்பியத்தில் 7 இடங்களில் ‘ஊழ்’ எனும் சொல் இடம்பெற்றுள்ளது. மேலும், மணிமேகலையில் இடம்பெற்றுள்ள ஊழ் எனும் சொல்லானது தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியப் பாடல்கள் முன்வைக்கும் இயற்கை சார்ந்த (முறை, மலர்தல், முதிர்தல், உதிர்தல் என்பன போன்ற) பொருளில் வழங்கப் பெறாமல், சமயச்சார்புப் பொருளான ‘ஊழ்வினை’ எனும் பொருளிலேயே வழங்கி வந்துள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இதுதவிர, வினை எனும் சொல்லும் முன், பின் ஒட்டுக்களுடன் 90 இடங்களில் மணிகேலைக் காப்பியத்தில் இடம்பெற்றுள்ளது. வினையின் வகை, வினையின்

இயல்புகள், வினைக்குரிய நிலைக்கலன்கள், வினையின் விளைவுகள் பற்றி மணிமேகலைக் காப்பியம் விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துரைக்கின்றது.

மணிமேகலையின் தோழி சுதமதியானவள் மணிமேகலையின் இயல்பினை உதயகுமாரனுக்குக் கூறுமிடத்து

**ஊழ்தரு தவத்தள் சாப சரத்தி" (5:16)**

என்கிறாள். இத்தொடருக்குக் குறிப்புரை தரும் உ.வே.சாமிநாதையர், "ஊழ் முறை, பௌத்தர்களுக்கு ஊழ்வினை உடன்பாடாகலின் ஊழ்வினால் தரப்பட்ட தவத்தை யுடையளென்றுமாம்" எனக் குறிப்பிடுகின்றார். ஊழ் என்பது முறை என்று சமயம்சார் வினைக் கருத்துநிலைக்கு அப்பாற்பட்ட பொருளைக் குறித்து வருவதற்குப் பாடலில் இடம்பெறும் தவம், சாபம் என்னும் சமயச்சார்புச் சொற்கள் முரணி நிற்கின்றன. எனவே மேற்குறித்த ஊழ் எனும் சொல் பழவினைப் ப்பொருளிலேயே பயின்று வந்துள்ளதாக க் கொள்ளலாம்.

சார்ங்கலன் என்னும் பார்ப்பனச்சிறுவன் மிகக் கொடிய தன்மையதான சுடுகாட்டிற்குத் தன் அறியாமையால் அதனை நகரமென எண்ணி இரவில் தனியே செல்ல, அங்கே களித்தாடிய பேயால் தாக்கப்பட்டு, அஞ்சித் தன் தாயாகிய கோதமையை அடைந்து உயிர் நீக்கிறான். இதனைக் கண்டு மனம் பொறாத கோதமை, காவல் தெய்வமான சம்பாபதியிடம் முறையிட, அதற்குச் சம்பாபதி, "உன் மகன் உயிரைக் கவர்ந்து சென்றது என்கிறாள். இதனை,

**"அணங்கும் பேயும் ஆருயிர் உண்ணா**

**பிணங்குநூல் மார்பின் பேது கந்தாக**

**ஊழ்வினை வந்திவன் உயிருண்டு கழிந்தது" (6-150-152)**

என்னும் பாடலடிகளின் வழி அறியலாம்.

### 6.4 கம்பராமாயணத்தில் ஊழ்

கம்பராமாயணத்தில் 'ஊழ்' (விதி அல்லது நியதி) என்பது கதையின் நகர்வைக் கட்டுப்படுத்தும் ஒரு மிக முக்கிய சக்தியாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. மனித முயற்சிக்கு அப்பாற்பட்ட, தவிர்க்க முடியாத ஒரு பேராற்றலாகவே கம்பர் ஊழைப் படைத்துள்ளார். இராமனுக்குப் பட்டாபிஷேகம் சூட்ட தசரதன் முடிவு செய்யும் போது, அதற்குத்

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

தடையாகக் கூனி மற்றும் கைகேயியின் மனம் மாறுவது ஊழின் செயலாகவே காட்டப்படுகிறது.

**சூழ்வினை நான்முகத் தொருவற் சூழினும்**
**ஊழ்வினை ஒருவரால் ஒழிக்கற் பாலதோ?"** (கம்ப. அயோ. கைகேயி **159)**

**ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று சூழினுந் தான்முந் துறும். (குறள் 380: ஊழ் அதிகாரம்)**

இராமன் மீது அளவற்ற அன்பு வைத்திருந்த கைகேயி, திடீரென மனம் மாறி இராமனைத் தூற்றிப் பேசுவதற்குக் காரணம் ”ஊழ்வினையானது குறுக்கிட்டு அதை மாற்றிவிடும் பேராற்றல் கொண்டது; அதை யாராலும் தடுத்து ஒழிக்க முடியாது ” கைகேயியின் மனமாற்றத்திற்கு அவளது சுயசிந்தனை காரணம் அல்ல, அவளை ஆட்கொண்ட விதியே காரணம் என்று கம்பர் குறிப்பிடுகிறார்.

இராமன் காடேகப் போவதை அறிந்து இலக்குவன் பெரும் சினம் கொண்டு, தடுத்தவர்களை அழிக்க முற்படுகிறான்.அப்போது இராமன் அவனிடம்

**நதியின் பிழை அன்று நறும்புனல் இன்மை; அற்றே**
**பதியின் பிழை அன்று பயந்து நமைப் புரத்தாள்**
**மதியின் பிழை அன்று, மகன் பிழை அன்று மைந்த!**
**விதியின் பிழை! நீ இதற்கு என்னை வெகுண்டது?’** (கம்ப. அயோ. நகர்நீங்கு படலம்-**129)**

“லட்சுமணா. ஏன் வீணாக கோபம் கொள்கிறாய். நதி ஒன்று நீர் இல்லாமல் வரண்டு போய், அழகற்று இருந்தால் அது அந்த நதியின் குற்றமா ? இல்லையே. மழை பெய்யாமல் போனதற்கு நதி மீது நாம் பிழை சொல்லலாமா? . அதுபோலத் தான் இதுவும். கையேயி என்ன செய்வால் பாவம் . இதில் குற்றம் என்பது தாய் கையேயி மீதும் கிடையாது, முடிசூடப் போகும் தம்பி பரதன் மீதும் கிடையாது, வரம் கொடுத்து நம்மை வனத்திற்கு போகச் சொல்லும் தந்தை மீதும் கிடையாது . இது விதியின் பிழை.(ஊழின் வினை) விதி இப்படி அமைந்துவிட்டது. இதற்குப் பாவம் அவர்கள் என்ன செய்வார்காள் .இதற்காகவா நீ சினம் கொள்கிறாய்? வேண்டாம்”அப்படியே இதுவும் ஊழின் பிழை" என்று கூறி இலக்குவனின் சினத்தை ஆற்றுகிறான்.

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

### 6.5 பக்தி இலக்கியத்தில் ஊழ்

உலக வாழ்க்கையில் ஊழ்வினையின் விளைவுகள் வந்து சூழ்ந்தாலும், இறைவனை வழிபடுவதன் மூலம் துன்பத்திலிருந்து விடுபடலாம் என்ற பக்தி நம்பிக்கை இப்பாடலில் வெளிப்படுகிறது.

**நறுமா மலர் கொய்து நீரின் மூழ்கி**

**நாடோறும் நின்கழலே யேத்தி வாழ்த்தித்**

**துறவாத துன்பந் துறந்தேன் தன்னைச்**

**சூழுலகில் ஊழ்வினை வந்துற்றால் லென்னே**

**உறவாகி வானவர்கள் முற்றும் வேண்ட**

**ஒலி திரை நீர்க் கடல் நஞ்சுண்டுய்யக் கொண்ட**

**அறவா அடியேனை அஞ்சே லென்னாய்**

**ஆவடு தண்டுறையுறை யும் அமரரேறே. (திருநாவுக்கரசர் தேவாரம் - பதிகம் 5.47)**

விண்ணுலகத் தேவர்களுக்கே மரண பயத்தைத் தந்த கடலின் நஞ்சை உண்டு அவர்களைக் காத்த கருணைக் கடலாகிய சிவபெருமான் திருவாவடுதுறையில் வீற்றிருக்கிறார் நாள்தோறும் விடியற்காலையில் எழுந்து, நீராடி, மலர் தூவி அவனது திருவடிகளைப் போற்றி வழிபடுபவர்களுக்கு, முற்பிறவியின் பயனாக வரும் கொடிய ஊழ்வினைகளோ அல்லது உலகத் துன்பங்களோ எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது. அவனது அருள் காவலில் இருக்கும்போது "ஊழ்வினை வந்துற்றால் தான் என்னே!" என்று அப்பர் பிரான் மிகுந்த மன உறுதியோடும் பக்தியோடும் பாடியுள்ளார்.

**வைப்பு ஆம் மருந்து ஆம் அடியரை வல்வினைத்**
**துப்பு ஆம் புலன் ஐந்தும் துஞ்சக்கொடான் அவன்,**
**எப்பால் எவர்க்கும் நலத்தால் உயர்ந்து உயர்ந்து,**
**அப்பால் அவன் எங்கள் ஆயர் கொழுந்தே (திருவாய்மொழி 10.7.2 (பாசுரம் 3851)**

மனிதர்களைத் தீய வழியில் இழுத்துச் செல்லும் வலிமை வாய்ந்தவை ஐம்புலன்கள். அவை முற்பிறவி வினைகளின் (வல்வினை) பலத்தால் நம்மை மீண்டும் மீண்டும் சம்சாரத் துயரங்களில் தள்ளும். ஆனால், எம்பெருமானை அடைந்த அடியார்களை அப்புலன்கள் ஒன்றும் செய்ய முடியாது. ஏனென்றால், எம்பெருமான் தன் அடியார்களுக்கு ஆபத்துக்கு உதவும் சேமிப்பு நிதியாகவும் (வைப்பு), பிறவிப் பிணியை அறுக்கும் மருந்தாகவும் இருந்து அடியவர்களைக் காப்பாற்றுகிறான். பரம்பொருளாகிய அவன், அடியார்களின் துயர்

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

துடைக்கவே எளிய கண்ணனாக அவதரித்துள்ளான் என்று நம்மாழ்வார் இறைவனின் திருவருள் திறத்தைப் போற்றுகிறார்.

## 7. மறுபிறப்பு நம்பிக்கை: சங்கம் முதல் பக்தி வரை

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

### 7.1 சங்க இலக்கியமும் காப்பியங்களும்

சங்க இலக்கியங்களில் மறுமை மற்றும் பிறவித் தொடர்ச்சி குறித்த சிந்தனைகள் தனித்த சமயக் கோட்பாடாக அல்லாமல், வாழ்வியல் உணர்வுகளோடு இணைந்தே வெளிப்படுகின்றன. கணியன் பூங்குன்றனாரின் பாடலில்,

“நீர்வழிப் படூஉம் புணைபோல்

ஆருயிர் முறைவழிப் படூஉம்” (புறநானூறு .192)

என உயிரின் இயக்கம் முறைவழியைப் பின்பற்றிச் செல்வது சுட்டப்படுகிறது. குறுந்தொகையில் இடம்பெறும் “இம்மை மாறி மறுமை ஆயினும்” என்ற தொடரில், மறுபிறவியிலும் அதே உறவு தொடர வேண்டும் என்ற தலைவியின் விருப்பம் வெளிப்படுகிறது. இதனால், பிறவித் தொடர்ச்சி காதலின் நிலைத்தன்மையையும் உறவின் நீட்சியையும் உணர்த்தும் கருத்தாக அமைகிறது.

மணிமேகலையில், பிறவித் தொடர்ச்சி தத்துவ நோக்கில் விரிவுபடுத்தப்படுகிறது. மணிமேகலை தன் முற்பிறப்பை உணர்வதும், “பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை” இடம்பெறுவதும் பௌத்தச் சிந்தனையின் அடிப்படையில் பிறவிச் சுழற்சியிலிருந்து விடுதலை பெறுதலை வலியுறுத்துகின்றன. இதனைத் திருக்குறளின்

“அவாவென்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்

தவாஅப் பிறப்பீனும் வித்து” (361)

என்ற குறளோடும் ஒப்பிடலாம். எனவே, சங்க இலக்கியத்தில் உறவின் தொடர்ச்சியாக வெளிப்படும் பிறவிச் சிந்தனை, காப்பியங்களில் தத்துவ நோக்குடன் வளர்ந்து, திருக்குறளில் அறம்–அவா–பிறவி என்ற தொடர்பில் விளக்கமடைகிறது.

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

### 7.2 நிலையாமையும் பக்தியும்

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு" (குறள் 339)

என்ற குறள் இறப்பையும் பிறப்பையும் உறக்கம்–விழிப்பு என்ற உவமையின் வழியாக விளக்குகிறது. இவ்வாறு பிறப்பு–இறப்பு சுழற்சி குறித்த சிந்தனை, உயிரின் நிலையாமையை உணர்த்துகிறது. திருவாசகத்தில் உயிர் பல்வேறு பிறவிநிலைகளைக் கடந்து வந்ததாகக் கூறப்படும் கருத்துகள், பிறவித் தொடர்ச்சியைப் பக்திச் சிந்தனையோடு இணைத்துக் காட்டுகின்றன.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; நீந்தார்
இறைவன் அடிசேராதார்" (குறள் 10),

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி" (குறள் 356)

ஆகிய குறள்கள் இறையுணர்வும் மெய்யறிவும் பிறவிச் சுழற்சியிலிருந்து விடுதலை பெறுவதற்கான வழிகளாகக் குறிப்பிடுகின்றன. எனவே திருக்குறளில் "எழுமை" என்பது அறத்தின் பயன் தொடர்வதைக் குறிக்க, "பிறவிப் பெருங்கடல்" என்பது பிறவிச் சுழற்சியிலிருந்து விடுதலை பெறுதலைக் குறிக்கிறது. இவ்விரு கருத்துகளும் முரண்பட்டவை அல்ல; அறவாழ்வின் பயனையும் இறுதிநிலையான விடுதலைக் குறிக்கோளையும் வெளிப்படுத்தும் இரு நிலைகளாக அமைகின்றன.

### 7.3 மணிமேகலையின் முற்பிறப்பு

மணிமேகலையின் பிறவிக் கருத்தை மூலவரிகளின் வழி மூன்று நிலைகளில் காணலாம்: முற்பிறப்பை உணர்தல்; பிறப்பின் காரணச் சங்கிலி; பிறவியை அறுத்தல் என்னும் இலக்கு. 30ஆம் காதையின் அடி எண்கள் 'பௌத்தமும் தமிழும்' இணையப் பதிப்பைச் சார்ந்தவை (சீத்தலைச் சாத்தனார்).

(அ) முற்பிறப்பை உணர்தல்

**”என் பெயர்த் தெய்வம் ஈங்கு எனைக் கொணர**

**இம் மன் பெரும் பீடிகை என் பிறப்பு உணர்ந்தேன்”**

**(பாத்திரம் பெற்ற காதை. 11)**

**பொருள்:** என் பெயருடைய தெய்வம் என்னை இங்குக் கொணர்ந்ததால், நிலைபெற்ற இப்பெரும் பீடிகையினாலே என் முற்பிறப்பை உணர்ந்தேன்.

**விளக்கம்:** மணிமேகலை தன் முற்பிறப்புப் பெயரையும் ('இராகுலன் மனைவி இலக்குமி') உறவையும் கூறி, இராகுலன் பாம்பு தீண்டி இறந்தபோது தான் தீப்புகுந்ததையும், அவ்வேளை சாதுசக்கரன் முனிவருக்கு உணவூட்டியதன் பயனாகவே அமுதசுரபி இப்பிறவியில் தன் கைப்புகுந்தது என்பதையும் விளக்குகிறாள். இது ஒரு பிறவியில் செய்த அறம் (உணவீதல்) பிறிதொரும் பயனாக விளைவதற்கான கதையியல் சான்று. 'ஒருமை--எழுமை' என்ற குறள்களின் அமைப்போடு இது பொருந்துகிறது. ஆயினும் இங்கு அறத்தின் பயன் தன் பாதுகாப்பாக அன்றிப் பிறருக்கு உணவளிக்கும் கருவியாக (அமுதசுரபியாக) மலர்வது குறிப்பிடத்தக்க வேறுபாடு.

**(ஆ) பிறவிக் காரணச் சங்கிலி**

**பவம் எனப்படுவது கரும ஈட்டம்**

**பிறப்பு எனப்படுவது அக் கருமப் பெற்றியின்**

**உறப் புணர் உள்ளம் சார்பொடு கதிகளில்**

**காரண காரிய உருக்களில் தோன்றல்**

**(பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை . 30), அடிகள் 93, 95--97)**

**பொருள்:** 'பவம்' என்பது செயல்களின் தொகுப்பு; 'பிறப்பு' என்பது அச்செயல்களின் தன்மைக்கேற்ப பல்வேறு கதிகளில் காரண--காரியமாய் இயையும் உடம்புகளாகத் தோன்றுவது.

**விளக்கம்:** இங்குப் பிறவி தெய்வத் தீர்ப்பாகவோ தற்செயலாகவோ அன்றி 'கரும ஈட்டம்' என்னும் செயற்றொகுதியின் விளைவாகப் பகுக்கப்படுகிறது. 'ஈட்டம்' என்பது குறளின் 'ஒருமைக்கண் தான்கற்ற' (398) என்னும் சேமிப்புருவகத்தோடு ஒப்பிடத்தக்கது; இரண்டிலும் செயல் ஈட்டப்பட்டுப் பின்னொரு தோற்றத்தில் விளைகிறது. இச்சங்கிலியின் தொடக்கம் 'பேதைமை' என்பது முக்கியமானது; குறள் 358 'பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்பது அறிவு' என்றும், 351 'பொருளல்லவற்றைப்

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

பொருளென் றுணரும் மருளானாம் மாணாப் பிறப்பு' என்றும் பேதைமையையும் பிறவியையும் இணைக்கிறது. குறள் 835இல் பேதை தன் செயலால் 'எழுமையும்' அழுந்துகிறான்; மணிமேகலையில் பேதைமை 'செய்கை'யாகி இறுதியில் பிறப்பாகிறது இரு நூல்களும் பேதைமையைச் செயலோடும் பிறவியோடும் இணைக்கும் காரணத்தொடரைக் காண்பதில் ஒத்துள்ளன.

**(இ) பிறவியை அறுத்தல்**

**தானம் தாங்கிச் சீலம் தலைநின்று**

**போன பிறப்பில் புகுந்ததை உணர்ந்தோள்**

**...**

**தவத் திறம் பூண்டு தருமம் கேட்டுப்**

**பவத்திறம் அறுகெனப் பாவை நோற்றனள் (பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை. 30, அடிகள் 1--2, 263--264)**

**பொருள்:** தானத்தை மேற்கொண்டு, சீலத்தில் தலைநின்று, முற்பிறப்புகளில் நேர்ந்தவற்றை உணர்ந்தவளாகிய மணிமேகலை, தவநெறிகளை மேற்கொண்டு தருமம் கேட்டு, 'பிறவிக்கு ஏதுவான குற்றங்கள் அறுக' என நோன்பு மேற்கொண்டாள்.

**விளக்கம்:** காதையின் தொடக்கமும் முடிவும் பிறவியோடு தொடர்புடையவை: தொடக்கம் 'போன பிறப்பு' உணர்தல்; முடிவு 'பவத்திறம்' அறுத்தல். இவ்வாறு காதை பிறப்பை உணர்தலிலிருந்து அறுத்தலுக்கு நகரும் வளைவாக அமைகிறது; இங்குப் பிறவித் தொடர்ச்சி பேணப்பட வேண்டிய பயனாக அன்றி அறுக்கப்பட வேண்டிய சுழலாக நோக்கப்படுகிறது. இதே இலக்கை,

**"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்**

**மற்றீண்டு வாரா நெறி' (குறள்.356)**

என்று சுட்டுகிறது. எனவே 'எழுமை' (பயன் நீளுதல்), 'பவத்திறம் அறுதல்' (பிறவி நீங்குதல்) என்னும் இரு நிலைகள் ஒன்றையொன்று மறுக்கவில்லை எனலாம்.

அட்டவணை 2 இம்மூன்று நூல்களின் மூலவரிகளையும் அவற்றின் பிறவி--வினை நோக்கையும் தொகுத்து ஒப்பிடுகிறது.

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

| நூல் / இடம் | மூலச் சொற்றொடர் | பிறவி--வினை நோக்கு |
|---|---|---|
| குறள் 126, 398 | ஒருமை... எழுமையும் ஏமாப் புடைத்து | ஒரு பிறவிச் செயல் → எழு பிறவிக் காப்பு (நன்மை) |
| குறள் 835 | எழுமையும் தான்புக் கழுந்தும் அளறு | ஒரு பிறவிச் செயல் → எழு பிறவி அழுந்துதல் (தீமை) |
| சிலப்பதிகாரம், பதிகம் 55--60 | ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் | ஊழ்வினை முதிர்ந்து பயனூட்டுதல்; அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று |
| சிலப்பதிகாரம், கட்டுரை காதை 27--30 | தீதுற வந்த வினை | முற்பிறவிச் செயல் → இப்பிறவி இழப்பு; கதையியல் நீதி |
| மணிமேகலை 30: 93, 95--97 | பவம் எனப்படுவது கரும ஈட்டம் | செயற்றொகுதி → பிறப்பு; காரண--காரியச் சங்கிலி |
| மணிமேகலை 30: 263--264 | பவத்திறம் அறுகெனப் பாவை நோற்றனள் | பிறவிக்கு ஏதுவானவற்றை அறுத்தல்; விடுதலை இலக்கு |
| குறள் 358 | பிறப்பென்னும் பேதைமை நீங்க | பேதைமை நீங்கிச் செம்பொருள் காணுதல்; பிறவி நீக்கம் |

இவ்வாறு குறள் பிறவிப் பயனை (நன்மையும் தீமையும்) எழுமை வரை நீட்டி அறத்தை வலியுறுத்துகிறது; சிலம்பு அதே காரணச் சங்கிலியை இருபிறவிக் கதையாக்கி நீதியாக்குகிறது; மணிமேகலை அச்சங்கிலியின் இணைப்புகளைப் பகுத்தாய்ந்து அறுப்பதை இலக்காக்குகிறது. ஆனால் திருக்குறள் மணிமேகலையோடு ஒத்த பிறவிநீக்க நோக்கையும் கொண்டிருப்பதால், மூன்று நூல்களையும் ஒரே கருத்தாடலின் மூன்று கோணங்களாகக் காணலாம். இது ஒத்த சொல்லாட்சிகளின் வழி ஒத்த சிந்தனைப் புலத்தை மட்டுமே சுட்டுகிறது.

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)




**Fig 6: மறுபிறப்பு நம்பிக்கை: சங்கம் முதல் பக்தி வரை**

இப்படம் சங்க காலம் முதல் பக்தி காலம் வரை தமிழ் இலக்கியங்களில் மறுபிறப்பு மற்றும் வினைக் கோட்பாடு வளர்ந்த விதத்தை விளக்குகிறது. திருவாசகத்தின் உயிர்ப் பரிணாமம், திருக்குறள், சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை ஆகிய நூல்களின் வழியே வினைப்பயன், பிறவிச் சுழற்சி மற்றும் பிறவி அறுத்தல் (வீடுபேறு) போன்ற கருத்தாக்கங்களை இது ஒப்பீட்டு அட்டவணையுடன் எடுத்துரைக்கிறது.

## 8. எண் குறியீட்டியல்: 'ஏழு'

### 8.1 பண்பாட்டு எண்ணாக ஏழு

எண்கள் கணிதக் குறிகள் மட்டுமல்ல; பண்பாடுகள் அவற்றுக்கு மதிப்பேற்றிச் சொல்லாடல்களாக்குகின்றன. இந்தியப் பண்பாட்டுப் பரப்பில் 'ஏழு' முழுமை, நிறைவு, தொடர்ச்சி ஆகியவற்றை உணர்த்தும் எண்ணாகப் பரவலாக வழங்கப்படுகிறது. தமிழில் ஏழிசை, எழுகடல், எழுநிலை மாடம், கடையெழு வள்ளல்கள், ஏழு கன்னிமார் வழிபாடு, எழுவகைப் பிறப்பு எனப் பல இடங்களில் 'ஏழு' ஒரு தொகுதியின் நிறைவைக் குறிக்கும் எண் வருகிறது. அட்டவணை 3 இவ்வழக்குகளை இவ்வாசிரியரின் முதல்நிலை வகைப்பாட்டின்படி தொகுத்துக் காட்டுகிறது.

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

| வழக்கு | களம் | 'ஏழு'வின் பொருள்நிலை |
|---|---|---|
| ஏழிசை | இசை | குறிப்பிட்ட எண்ணிக்கை (ஏழு சுரங்கள்) |
| கடையெழு வள்ளல்கள் | சங்க கால வரலாறு | குறிப்பிட்ட எண்ணிக்கை (பெயர் சுட்டப்படும் ஏழு வள்ளல்கள்) |
| ஏழு கன்னிமார் | நாட்டார் வழிபாடு | தொகுதி எண்ணிக்கை (ஏழு தெய்வங்களின் தொகுதி) |
| சப்தபதி | திருமணச் சடங்கு | சடங்கு எண்ணிக்கை (ஏழடிகள்) — உறவு நிலைப்பின் குறியீடு |
| எழுநிலை மாடம் | கட்டடம், நகரம் | உயர்வு, நிறைவு — பெருமிதக் குறி |
| எழுகடல் | பொதுப் புவிசார் மரபு | முழுமை — 'எல்லாக் கடலும்' |
| ஏழேழு பிறவி | வழக்காறு | முழுமை, பெருக்கம் — எண்ணிக்கை மங்குதல் |
| எழுமை / எழுபிறப்பு | குறள் | இக்கட்டுரையின் வாசிப்பில் முழுமை, தொடர்ச்சி |

இவ்வாறு நோக்கும்போது 'ஏழு' இருவகையாக இயங்குவது புலப்படுகிறது.

### 8.2 ஒப்பீட்டுச் சூழலும் சொல்வரிசையும்

திருமணச் சடங்கின் 'சப்தபதி' ஏழடி நடையால் உறவின் நிலைப்பைச் சுட்டுவதும், 'ஏழேழு பிறவி' என்னும் வழக்கு உறவு பிறவிகளைக் கடந்தும் நீடிக்கும் என்ற நம்பிக்கையை உணர்த்துவதும் பொது வழக்குகள். பாலி நூல் மரபில் சோதாபன்ன நிலையை அடைந்தவர் அதிகபட்சம் ஏழு முறை மட்டுமே மீண்டும் பிறப்பர் என்னும் கருத்தும் உண்டு; அங்கு 'ஏழு' பிறவியின் உச்ச எல்லையைக் குறிக்கிறது. இவ்வொப்பீடுகள் இந்தியப் பண்பாட்டுப் பரப்பில் 'ஏழு' பெறும் பொது மதிப்பை எடுத்துக்காட்டுகின்றன. குறளில் எண்ணடிச் சொற்கள் காலத்தையும் நிலையையும் வகைப்படுத்தும் சொல்வரிசையாகச் செயல்படுகின்றன. 'ஒருமை' செயல் நிகழும் களமாகிய இப்பிறவி.

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

'எழுமை' பயன் தொடரும் முழுக்காலம்; இடையிலுள்ள 'இருமை'யை உரை மரபுகள் இம்மை--மறுமை, பிறப்பு--வீடு, நன்மை--தீமை எனப் பல பொருள்களில் வாசிக்கின்றன. இவ்வாறு நோக்கினால் 'ஒன்று--ஏழு' என்னும் இணை 'சிறு--பெரு', 'இப்போது--எப்போதும்' என்பவற்றுக்கு இணையான குறியீட்டு இருமையாகிறது.




**Fig 7: எண் குறியீட்டியல்: 'ஏழு' - பண்பாட்டு விளக்கப்படம்**

இப்படமானது 'ஏழு' எனும் எண்ணின் பண்பாட்டு மற்றும் குறியீட்டுப் பொருள்களை விளக்குகிறது. ஏழிசை, கடையெழு வள்ளல்கள், ஏழு கன்னிமார் ஆகிய குறிப்பிட்ட எண்ணிக்கைகளையும்; எழுகடல், எழுநிலை மாடம், ஏழேழு பிறவி, குறளின் 'எழுமை' போன்ற முழுமை மற்றும் தொடர்ச்சியைக் குறிக்கும் இருவகை குறியீட்டு இயங்குநிலைகளையும் 'ஒருமை–எழுமை' ஒப்பீட்டுடன் தெளிவாகக் காட்சிப்படுத்துகிறது.

## 9. எதிர்கால ஆய்வுகள்

அறவியல் தளத்தில் 'எழுமை'க் குறள்கள் ஊக்கச் சொல்லாடலாகவும் உறவுநிலைச் சொல்லாடலாகவும் செயல்படுகின்றன. பயன் என்ற சொல் தனிமனிதக் கணக்காகப் பேசப்படாமல் குடிவழி, நட்பு ஆகிய உறவுகளின் நீட்சியாகவே பேசப்படுகிறது குறளின் பிறவிப் பேச்சு கோட்பாட்டு நிறுவலைவிடச் சமூக வாழ்வியலோடு பிணைந்தது என்பதை இது காட்டுகிறது. வினைப்பயன் தளத்தில் குறள் ஊழையும் முயற்சியையும் சமநிலைப்படுத்துகிறது; சிலம்போ ஊழ்வினையைக் கதைநீதியாக்குகிறது. மறுபிறப்புத் தளத்தில் 'எழுமை' (பயன் நீளுதல்), 'பிறவி அறுத்தல்' ஆகிய இரண்டும் இல்லறம், துறவறம்

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

என்னும் இருநிலைகளுக்குரிய இரு நோக்குகளாகப் பொருந்துகின்றன. குறியீட்டியல் தளத்தில் 'ஏழு'வை எண்ணிக்கையாக அன்றி முழுமையை உணர்த்தும் மரபுத்தொடராக வாசிக்கலாம்.

உரைகளுக்கிடையிலான வேறுபாடுகள் பொருள் தேர்வைப் பாதிக்கக்கூடும். எதிர்கால ஆய்வுகள் குறள், சங்க இலக்கியம், காப்பியம், பக்தி நூல்கள் முழுவதிலும் 'எழு-' என்று தொடங்கும் சொற்களையும் 'பிறவி', 'மறுமை' போன்ற சொற்களையும் கணினிசார் சொற்பட்டியல் முறையில் தொகுத்து ஒப்பிடலாம்.

பயன்பாட்டு நோக்கில், 'எழுமை'க் குறள்களைப் பிறவிநம்பிக்கை சார்ந்த சமயப் போதனையாக மட்டுமன்றிச் செயலின் நீண்டகால விளைவுகளைப் பற்றிய அறச்சிந்தனையாகவும் வாசிப்பது, பள்ளி, கல்லூரி அறக்கல்வியில் இக்குறள்களைச் சமயச் சார்பின்றிக் கற்பிக்க வழிவகுக்கும்.

## 10. முடிவுரை

**1.** குறளில் 'எழுமை/எழுபிறப்பு' என்னும் சொல்லாட்சி அறத்துப்பாலிலும் பொருட்பாலிலும் இடம்பெற்று, நன்மையின் காப்பையும் தீமையின் அழுந்துதலையும் பிறவிகளுக்கு நீட்டும் அறவியல் சொல்லாடலாக அமைகிறது.

**2.** 'ஒருமை--எழுமை' இணைமுரண் செயலை இப்பிறவிக்கு உரியதாகவும் பயனைத் தொடர்ச்சிக்கு உரியதாகவும் வகுக்கிறது; ஊழையும் முயற்சியையும் சமநிலைப்படுத்தும் குறளின் நிலைப்பாடு இதை வெறும் விதிக்கணக்காகிவிடாமல் காக்கிறது.

**3.** சிலப்பதிகாரம் ஊழ்வினையைக் கதையியல் நீதியாகவும், மணிமேகலை பிறவி அறுத்தலை இலக்காகவும் முன்வைக்கும் நிலையில், குறள் இவ்விரு நோக்குகளையும் (எழுமையும் பிறவிப் பெருங்கடலும்) ஒரே நூலுக்குள் இணைக்கிறது.

**4.** 'எழுமை' என்பது பிறவிகளின் துல்லியக் கணக்கு அன்று; 'ஒன்று'க்கு எதிரான முழுமையை உணர்த்தும் பண்பாட்டு எண்-மரபுத்தொடர் என்ற வாசிப்பைப் பனுவலின் உள்சான்றுகள் ஆதரிக்கின்றன.

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

## 11. மேற்கோள் நூல்கள் (References)


1. இளங்கோவடிகள். சிலப்பதிகாரம். ந.மு. வேங்கடசாமி நாட்டார்(உ.ஆ) கௌரா பதிப்பகக் குழுமம் , சென்னை . 2011.
2. திருக்குறள் போற்றும் அறவாழ்வு. https://www.tamilvu.org/courses/degree/c031/c0312/html/c03123l2.htm
3. தமிழ் இலக்கிய வரலாறு. https://www.tamilvu.org/library/nationalized/pdf/56-cbalasubramaniyan/tamilelakkiavaralaru.pdf
4. திருக்குறள் திருவள்ளுவர் , பரிமேழகர் உரை சாரதா பதிப்பகம்,2009
5. மணிமேகலை ) கௌரா பதிப்பகக் குழுமம் , சென்னை . 2011.
6. குறுந்தொகை. நியு செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை2008
7. புறநானூறு. நியு செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை2008
8. அருணாசலம் ப., (1969), பக்தி இலக்கியம், சென்னை : பாரி புத்தகப் பண்ணை.
9. சாமிநாதையர் உ.வே. (ப.ஆ.), (2008), மணிமேகலை, சென்னை : டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம்.
10. முனீஸ்மூர்த்தி மு., (2011), தமிழ்ச் செவ்வியல் படைப்புகளில் ஊழ் : கருத்தியல் மாற்றம், காரைக்குடி : தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக்கழகம்.
11. லட்சுமணன் கி., (2000), இந்திய தத்துவ ஞானம், சென்னை : பழனியப்பா பிரதர்ஸ்.


© 2026 Dr.KAVITHA N.M., Dr. MOGANAMBIKA K. P., Dr VALARMATHI V. P.. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..